**இலங்கை சூழல்சார் உயர் தொழிலாளர்கள் நிறுவகம்- 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சூழல்சார் உயர் தொழிலாளர்கள் நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாட நெறி வருமானம், பாட நெறி செலவினம், தொழில்சார் கட்டணம் மற்றும் கணக்கு செலவினம் போன்ற வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கான பேரேட்டு கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | தொழில்சார் கட்டணம் மற்றும் கணக்கீட்டு கட்டணத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது பேரேட்டுக் கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளது. | சகல வரிசை விடயங்களுக்காகவும் பேரேட்டில் தனித்தனியாக கணக்குகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 17 இன் 17.18 மற்றும் 17.20 இன் பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்துவதற்காக தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னர் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அதன் பயன்தரு ஆயுட் காலத்தில் சீரான அடிப்படையில் பெறுமானத் தேய்வு பதிவழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டின் இறுதி வரையும் நிறுவகத்தின் சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்வு கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் போது முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் பயன்பாட்டிற்கு தயார்படுத்தப்பட்ட திகதியினை கவனத்தில் கொள்ளாமல் கொள்வனவு செய்த ஆண்டின் போது முழு ஆண்டிற்கும் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் | 2023 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்களும் அது கைப்பற்றப்பட்ட திகதியினை அடிப்படையாக கொண்டு பெறுமானத் தேய்வு செய்யப்படுவதுடன் 2019 இற்கு முன் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக தின காலப்பகுதிகள் பதிவேடுகளில் குறிப்பிடப்படாமையால் பெறுமானத் தேய்வு மேற்கொள்ள முடியாதிருந்தமையை தெரிவிக்க விரும்புகின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட நிதியம் அதிகரித்து காண்பிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் | 541,363 | நிலையான சொத்து பதிவேடு மற்றும் சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு 2022 ஆம் ஆண்டில் இருந்து பேணிச் செல்லப்படுவதுடன் 2022 ஆம் ஆண்டிற்கு முன்னர் சொத்துக்களை கொள்வனவு செய்தல், கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளுக்கு பதிலாக ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. | பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான மூல ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் உரிய பிரகாரம் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | அனுசரணையாளர் படிகள் | 525,000 | பற்றுச்சீட்டு | 2022 ஆம் ஆண்டில் சகல பெறுவனவுகளுக்காகவும் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டுக்கள் | |
| (இ) | அங்கத்தவர் கட்டணம் | 801,675 | அங்கத்தவர் பெயர் பதிவேடு, உரிய பற்றுச்சீட்டுக்கள் | விநியோகிக்கப்படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது சகல அங்கத்தவர் வருமானம் மற்றும் அனுசரணையாளர் கையளித்தலுக்காக இணையவழி ஊடாக பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பாடநெறிக் கட்டணம் | 600,500 | பாடநெறிக் கோவை, கட்டண பதிவேடு | பதிலளிக்கப்படவில்லை. | |
| (உ) | கொடுப்பனவு (காசோலை மூலம்) | 7,620 | பயன்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | பதிலளிக்கப்படவில்லை. | |
| (ஊ) | கொடுப்பனவு (காசோலை மூலம்) | 262,123 | பற்றுச்சீட்டுக்கள், கூறு விலைகோரல், | பதிலளிக்கப்படவில்லை. | |

உறுதிப்படுத்தும் ஆவணம் போன்ற உபயோக ஆவணங்கள்

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(1) ஆம் பிரிவு | கணக்காய்வு செய்யப்படுகின்ற சகல நிறுவனங்களும் தமக்கு ஏற்றவாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்க வேண்டியிருந்த போதிலும் இந்த நிறுவகத்தால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபித்து செயற்படுத்துதல் தொடர்பாக 2024 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 05 ஆம் பிரிவு மற்றும் 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | பெறுமதி ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் சகல கொடுப்பனவுகளின் போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 முத்திரைக் கட்டணம் சகல கொடுப்பனவுகளின் போதும் அறவிடுவதற்கு 2023 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பிரகாரம் முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 352,822 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,868,944 ஆகும். ஆதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,516,122 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருமானம் மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 1,108,826 இனால் குறைவடைந்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 15,000 ஆன நிறுவகத்தின் சில்லறைக் காசு கட்டுநிதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகளில் ஆகக் கூடிய எல்லை குறித்துரைக்காமையால் ரூபா 1,000 முதல் ரூபா 10,400 வரையான வீச்சிலான பெறுமதியுடைய கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பெறுமதி ரூபா 15,000 ஆன நிறுவகத்தின் சில்லறைக் காசு கட்டுநிதியில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளின் ஆகக் கூடிய எல்லையை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சில்லறைக் காசு கொடுப்பவுகளுக்காக பொருத்தமான எல்லையொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| PE/COP/POLI/Circular மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூலில் 6.6 ஆம் பந்தியின் பிரிவின் பிரகாரம் நியதிச்சட்ட நிறுவனங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 11 மாத தாமதத்தின் பின்னர் 2024 பெப்ரவரி 12 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தாமதம் தொடர்பாக நிறுவகம் கவனம் செலுத்தியுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைத்த திகதிக்கு முன்னர் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| PE/COP/POLI/Circular மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூலில் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டினதும், அதற்கு முன்னைய ஆண்டினதும் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நிறுவகத்தால் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டறிக்கை குறித்துரைத்த திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |